பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆவணி 19 (4—9—72) திங்கள் வெளியூர்: ஆவணி 20 (5—9—72) செவ்வாய் [இதழ்: 69

முதலமைச்சர் கலைஞர் நிகழ்ச்சிகள்

செப். 5 பிற்பகல் 1-20: மணி: தூத்துக்குடி—இந்தியத் தலைமை அமைச்சருக்கு வரவேற்பு.

மாலை 4 மணி: வ.உ.சி. கல்லூரி வெள்ளிவிழா நிகழ்ச்சி.

மாலை 5 மணி: வ.உ.சி. அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்ச்சி.

மாலை 6 மணி: வ. உ. சி. சிலை திறப்பு விழா நிகழ்ச்சி.

செப். 6 காலை 9 மணி: கன்னியாகுமரி—புதிய இரயில் பாதை (திருநெல்வேலி--திருவனந்தபுரம்--நாகர்கோவில்வழி) அடிக்கல்நாட்டுவிழா.

பிற்பகல் 12 45 மணி: இந்தியத் தலைமையமைச்சர் வழியனுப்புதல்.

வடக்கே சட்டம்-ஒழுங்கு படும்பாடு

கல்லூரி விடுதியில் போலீசு கெடுபிடி

மாணவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்

மறியல் செய்த மாணவர்கள் மீது தடியடி-- நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிறையில்!

ஜெய்ப்பூர் செப். 3—

இங்குள்ள எஸ்.எம்.எஸ். மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதிக்குள் போலீசார் நுழைந்து இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்களை வெளியேற்றினர்.

விடுதியை விட்டு மாணவர்களை வெளியேற்ற வேண்டும் என்று அரசு பிறப்பித்த கட்டளையை நிறைவேற்றும் வகையில், இன்று பொழுது விடிவதற்கு முன்னர் திடீரென்று ஏராளமான போலீசார் டிரக்குகளில் வந்து விடுதிக்குள் நுழைந்து மாணவர்களை வெளியேற்றியது, நாடகக் காட்சியைப்போல் இருந்தது.

மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று விடுதிகளிலுமிருந்து அத்துமீறி நடந்ததாக 203 மாணவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

'செப்டம்பர் முதல் நாளுக்குள் விடுதியைக் காலி செய்ய வேண்டும்' என்பது அரசின் ஆணை என்றும், ஆனால் இந்த மாணவர்கள் காலக் கெடு முடிந்தும் வெளியேறாததால் அவர்கள் அத்துமீறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர் என்றும் தொடர்புடைய அதிகாரி ஒருவர் கூறினார்.

மற்றும் 118 மாணவர்கள், தாங்களாகவே தங்கள் வீடுகட்குத் திரும்ப ஒப்புக்கொண்டதாகப் போலீசுத் தரப்பில் கூறப்படுகிறது.

இதற்கிடையில், நேற்று கைதான 107 மாணவர்களும செப். 5-ந் தேதிவரை காவலில வைக்கப்பட்டுள்ளனர்; இவர்கள் எஸ்.எம்.எஸ். மருத்துவமனை காம்பவுண்டுக்குள் நின்று -- மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களை வேலைக்குச் செல்ல முடியாமல் தடுத்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலீசார் மருத்துவமனைக் காம்பவுண்டுக்குள் நுழைந்து தடியடிப் பிரயோகம் நடத்தியதாக மருத்துவ மாணவர்களின் மாநில நடவடிக்கைக் குழு புகார் கூறியுள்ளது.

ஆயுதம் தாங்கிய போலீசார் தொடர்ந்து மருத்துவமனையையும் -- மாணவர் விடுதியையும் காவல் புரிந்துவருகின்றனர்.

இராஜஸ்தானில் உள்ள ஐந்து மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த 5,000 மருத்துவ மாணவர்கள் -- ஹவுஸ் சார்ஜன்கள் -- ரிஜிஸ்திரார்கள் -- இன்று 17-வது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

விளைவுகளுக்குத் தயாராக இருக்கவேண்டும்

தனியார் கல்லூரிகட்கு கடும் எச்சரிக்கை

கோழிக்கோடு செப் 4—

"அரசுடன் செய்துகொண்ட உடன்பாட்டைச் செயல்படுத்த மறுக்கும் தனியார் கல்லூரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

'ஒப்பந்தத்தை அவை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்; அல்லது அதன் விளைவுகட்கு அவை தயாராக இருக்க வேண்டும்'"

என்று உள்துறை அமைச்சர் கருணாகரன், செய்தியாளரிடம் பேசுகையில் கூறியிருக்கிறார்.

சிறைச்சாலைக்குள் துப்பாக்கிச் சூடு

ஒருவர் மரணம்--55 கைதிகள் காயம்

கைதிகளின் உணவுப் போராட்டம்--அடக்கப் பீகார் அரசு மேற்கொண்ட 'அணுகு முறை'!

பாட்னு, செப். 4—

நேற்று காலை சயா மத்திய சிறைக்குள் கற்களைவீசி வன்முறையில் இறங்கிய கைதிகள்மீது போலீசார் தடியடிப் பிரயோகமும்-- துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததில ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் 55 நபர்கள் காயமடைந்தனர்; இவர்களில் 6 நபர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டது.

கல்வீச்சில் 25 போலீசு அதிகாரிகளும்--50 கான்ஸ்டபிள்களும் காயமடைந்ததைத் தொடர்ந்து போலீசார் தடியடிப் பிரயோகமும்-- துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாக மாவட்ட மாஜிஸ்திரேட் நிருபர்களிடம் கூறினர்.

உணவு அளவு குறைக்கப்பட்டதாகவும், தங்களைச் சிறை ஊழியர்கள் அடிக்கடி தாக்கியதாகவும் கூறி இரண்டு வார்டுகளில் உள்ள கைதிகள் கிளர்ச்சி செய்துவருவதாக மாஜிஸ்திரேட் கூறினர்.

11 கைதிகள் சிறையின் கூரையில் ஏறி நின்றுகொண்டு—தங்களுடைய குறைகளைத் தெரிவித்து 'கோஷ'ங்களைப் போட்டதாகவும்-- கற்களை வீசியதாகவும் கூறினர்.

அவர்களை எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பலன் தராமல் போகவே, தடியடியும் -- துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது; அதில் 10 நபர்களுக்குத் தடியால் அடிபட்டுக் காயமும, இரண்டு நபர்களுக்குத் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து காயமும் ஏற்பட்டது.

பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா --- 63-ஆம் ஆண்டு நிறைவு விழா

செப். 15 முதல் 30-ம் நாள் வரையில் சிறப்புறக் கொண்டாடுக!

கழக அமைப்புக்கள் -- துணை சார்பு மன்றங்கட்குப் பொதுச்செயலாளர் நாவலர் வேண்டுகோள்

சென்னை, செப். 4 —

"பேரறிஞர் அண்ணு அவர்களின் அறிவுரைகளையும் -- அவர் கொண்டிருந்த இலட்சியங்களையும் மக்களுக்கு எடுத்துவிளக்கும் வகையில் சொற்பொழிவுகள் -- இன்னிசைக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியும், கழகக் கொடி ஏற்றுதல் -- அண்ணு அவர்களின் திருவுருவப் படம் திறந்துவைத்தல் -- குழந்தைகட்கு இனிப்பு வழங்குதல் -- ஏழைகட்கு உணவு அளித்தல் -- பள்ளிச் சிறுர்கட்குப் புத்தகம் மற்றும் எழுது பொருட்கள வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டும், சிறப்பான ஊர்வலங்கள் நடத்தியும், விழா நாட்களைப் பெருமைக்குரிய வகையில் கொண்டாடுமாறு கழகத்தின் மாவட்ட -- வட்ட -- பகுதி -- கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் -- தோழர்கள, கழகத் துணைச் சார்பு மன்றங்களின் நிர்வாக்கள் -- தோழர்கள், கழகச் சார்பான தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் -- தோழர்கள் ஆகியோரை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளைச் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளும் வகையில் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்கிருர்; அவரது அறிக்கை வருமாறு:—

'கழகத்தின் ஒப்பற்ற தலைவரும் -- தி.மு. கழகம் கண்டவரும் -- வழிகாட்டியும் -- இந்த நாட்டின் அரசியலில் கண்ணியத்தையும் கடமை உணர்வையும் மிகுதியாக வளர்த்தவரும் -- சனநாயகத்தின பெருங்காவலராக விளங்கிய வருமான பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாள் விழா, செப்டம்பர் 15-ம் நாள் அமைகிறது.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே விடுத்துள்ள வேண்டுகோளுக்கேற்பவும், ஆண்டுதோறும் நம் கொண்டாடும் சிறப்புகளுக்கொப்பவும், செப்டம்பர் 15-ம் நாள்முதல் 30-ம் நாள் வரையிலான இரண்டு கிழமைகளைப் பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாவாகவும் -- அறுபத்திமூன்றும் ஆண்டு நிறைவு விழாவாகவும் கொண்டு, எல்லா வகையிலும் சிறப்புறக் கொண்டாடுவதற்கு, முனைந்து ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நாடெங்குமுள்ள கழக அமைப்புக்களையும் -- துணை சார்பு மன்றங்களையும் -- தோழர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்குள்ள கழக அமைப்புக்கள், ஆங்காங்குள்ள தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் -- தோழர்களையும் விழா நாட்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

அண்ணு அவர்கள் போதித்த கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு ஆகியவற்றுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்."

சிங்கப்பூர் பொதுத்தேர்தல்

எதிர்க் கட்சிக்கு ஓர் இடமும் இல்லை

சிங்கப்பூர், செப். 4—

சிங்கப்பூரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தலைமை அமைச்சர் லீ குவான் யூவின் மக்கள் செயல் கட்சி எல்லா இடங்களையும் (அதாவது மொத்தமுள்ள 65 இடங்களையும்) கைப்பற்றியிருக்கிறது.

மொத்தம் பதிவான வாக்குகளில 75 சதவிகித வாக்குகள், மக்கள் செயல் கட்சிக்குக் கிடைத்திருக்கின்றன.

மொத்தமுள்ள 8,12,000 வாக்காளர்களில 90 சதவிகிதம் பேர் வாக்களித்திருக்கின்றனர்.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில், தொடர்ந்து எதிர்க் கட்சி இருக்காது என்பதே தேர்தல் முடிவுகளின் பொருளாகும்.

கடந்த ஏழு ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியே இல்லை!

'ஏற்றத்தாழ்வற்ற குறிக்கோள்களே நாட்டின் மறுவாழ்வுக்கு அடித்தளம்'

'ஒவ்வொரு குடிமகனுக்கும் உத்தரவாதமுள்ள வாழ்க்கைமுறை அமைந்திருப்பது அவசியம்'

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வலியுறுத்தல்

சென்னை, செப். 4—

"பொருளாதாரத் துறையிலும் சரி – சமூகத் துறையிலும் சரி – மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது! ஒவ்வொரு குடிமகனுக்கும் உத்தரவாதமான வாழ்க்கை முறை அமைந்திருக்க வேண்டும் – சுயவளர்ச்சிக்கும் சம வாய்ப்புக்கள் இருக்கவேண்டும்; மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள இந்தக் குறிக்கோள்களே நமது நாட்டின் மறுவாழ்வின் அடித்தளமாகும்"

என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், 'பாரதீய வித்யா பவன்' சென்னை நிலையத்தின் மூன்று கட்டடங்களையும், கலை அரங்கையும் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கினர்.

இந்த நிறுவனத்தை நிறுவிய கே. எம். முன்ஷியின் உருவப் படத்தை, ஆளுநர் கே. கே. ஷா திறந்து வைத்தார்.

விழா மலரை வெளியிட்டும் - புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்தும் தமிழ்நாடு மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம் பேசினர்.

விழாவில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, எம். பக்தவத்சலம் உள்ளிட்ட பலர் பேசினர்.

பிற மொழிகளிலுள்ள அறிவுச் செல்வங்கள்

மக்களிடையே பரவுவது அவசியமாகும்

குடியரசுத் தலைவர் கிரி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மொழிக்கும் அவைகளுக்கென்று ஒரு தனி வரலாறு உண்டு; அவைகளின் தோற்றுவாயும் -- வளர்ச்சியும் சிறப்புமிக்க ஆராய்ச்சிக்குரியவைகளாகும்; அந்தந்த மொழி மக்களின் வரலாறு -- கலாச்சாரம் -- பழக்க வழக்கங்கள் -- மரபுகள் -- வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை இந்த மொழிகளிலுள்ள இலக்கியங்களின் வாயிலாகக் கண்டு அறியலாம்.

ஒரு மொழியிலுள்ள பேரிலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடுவது -- அவற்றிலுள்ள அறிவுச் செல்வத்தையும், செய்தி களையும் ஏராளமானோரிடை பரப்புவதற்கு மட்டுமன்றி, அதில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை உணர்த்துவதற்கும் துணைபுரியும்.

தமிழ்மொழி-காலத்தால் அழியாமல் தழைத்திருக்கிறது!

உலக மொழிகளில் காலத்தால் அழியாமல் இன்று வரையில் தழைத்திருக்கும் மொழிகளில் தமிழ் மொழி தனியொரு இடத்தைப் பெற்றிருக்கிறது.

தமிழ்ப் பெரும் மக்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் கடல் கடந்த நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

சிறந்த உச்சரிப்பும் -- பொருளுணர்த்தும் திறமையும் வாய்ந்த மிக அழகிய மொழி தமிழ்.

திருக்குறள் என்னும் தமிழ் இலக்கியம் மக்கள் கடைபிடித்து வாழவேண்டிய நெறிமுறைகள் அனைத்தையும் கற்பிக்கிறது. மிக உயர்ந்த – தூய்மையான மனித சிந்தனைகள் கொண்டதென்று உலகெங்கிலுமுள்ள அறிஞர்கள் திருக்குறளைப் பாராட்டுகின்றனர்.

வரலாறாயினும் -- கிராமக் கலைகளாயினும் -- நாடகமாயினும் இசையாயினும் -- தமிழ் மொழியில் மற்றவர்கள் கண்டு பொறாமைப்படத்தக்க அரிய செல்வங்கள் அடங்கியுள்ளன.

தற்காலத்திய தமிழ் எழுத்தாளர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாகத் தமிழ் இலக்கியமும், அதன் ஆழ்ந்த செல்வங்களும் எல்லா மக்களும் படித்து உணரத்தக்க வகையில் எளிதாக்கப்பட்டிருக்கின்றன; இப்போது சாதாரண மக்களும் இவற்றைப் படித்து புரிந்துகொண்டு பாராட்டுகிறார்கள்.

தென்னகத்திலுள்ள தெலுங்கு–மலையாளம் – கன்னடம் ஆகிய மற்ற மூன்று மொழிகளும்கூட இலக்கிய வளம் நிறைந்தவையாகும்."

முதலமைச்சர் கலைஞர் கருத்துரை

பாரதிய வித்யா பவன் திறப்பு விழாவிற்குத் தலைமைதாங்கிப்பேசுகையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"நம்பிக்கை -- சுய கட்டுப்பாடு -- சேவா உணர்ச்சி எனும் கொள்கைகளைக் கொண்டு இந்தப் பவனம் ஆமையப் பெற்றிருக்கிறது.

இந்தப் பவனத்தில், எங்களது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணாவின் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு எனும் இலட்சியங்கள் கொலுவீற்றிருக்கின்றன என நான் கூறுவது, இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமுடையது என்றே நம்புகிறேன்.

தனது உன்னத இலட்சியப் பயணத்தில் இந்த நிறுவனம் எல்லா வெற்றிகளையும் பெறவேண்டும் என நான் விரும்புகிறேன்.

நடை பயிலும் நதி

இந்தியக் கலாச்சாரம் என்பது, நடைபயிலும் நதி!

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் தனக்கென ஒவ்வொரு மொழியும் --இலக்கியமும் கொண்டவைகளாகும்; ஒவ்வொரு பகுதியிலும் வேறுபட்ட இசை நடையும் -- நாடகமும் -- நடனமும் பூத்துக் குலுங்குகின்றன.

இவை அனைத்தும் ஒருங்கு திரண்டதற்குப் பெயர்தான இந்தியக் கலாச்சாரம்!

ஆகவே, இந்த நிறுவனத்தின் இலட்சியம், 'வட்டாரக் கலாச்சாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை மட்டும் மேன்மையுற எடுத்துரைப்பது' என்றில்லாமல் வடஆர்க் கலாச்சாரங்களையும் மேன்மையுற எடுத்துரைக்க வேண்டும்.

இதன்மூலம், ஒரு வட்டாரத்து மக்கள் இன்னொரு வட்டாரத்தைப் புரிந்துகொள்ளலாம்; அத்துடன், இந்தியக் கலாச்சாரத்துக்குத் தங்களது பகுதி ஆற்றும் பங்கு பற்றி அறியவும் -- உற்சாகம் கொள்ளவும் வழி வகுக்கும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில, 'தமிழ்க் கலாச்சாரத்தின் உயிரோட்டம் அதன் மொழி இலக்கிய அடித்தளத்தின்மீது ஓடுகிறது' என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்நிறுவனத்தின் இலட்சியம், 'இந்த உலகம் ஒரு குடும்பம்' என்று அறிகிறேன்; இதே கொள்கையை, இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தமிழ்ப் புலவர் -- தமிழக மக்களின் இலட்சியமாக -- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் பாடினரென அறிகின்றபோது நான் பூரிப்படைகிறேன்.

தமிழ் இலக்கியத்தில் பொதிந்துள்ள மாபெரும் உண்மைகள் மக்களின் இதயத்தைத் தடவ வேண்டுமானால் -- மக்களின் மனத்தை நெகிழ வைக்க வேண்டுமானல், அந்த உண்மைகள், அந்த மக்கள் எந்த மொழியின் மடியில் பிறந்தார்களோ அதன் வாயிலாக எளிமையாகப் பரப்பப்பட வேண்டும்.

ஆகவே இந்தத் தேசிய நிறுவனம், தமிழ்நாட்டுக் கிளைகள் மூலமாக தமிழ் இலக்கியம் கூறும் உண்மைகளைப் பரப்ப வேண்டும்; அதை வட்டாரத்தில் மட்டுமல்லாமல் -- இந்தியாவின் பிற பாகங்களுக்கும், வெளிநாடுகட்கும் இப்பணி பரவ வேண்டும்; இந்த நிறுவனத்தின் நிர்வாகிகள் இதுபற்றிக் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

'இந்திய மக்களின் கலாச்சார வரலாறு' எனும் பெருந் தொகுப்புக்கள் கொண்ட நூல், தமிழிலும் -- பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுவது கேட்டு மகிழ்கிறேன்.

தீவுத் திடலுக்குப் பதிலாக வேறு இடம்

விரைவில்பேச்சுவார்த்தை நடைபெறும்

புதுடில்லி, செப். 4—

சென்னையில் பாதுகாப்புத் துறை கட்டடம் கட்டுவதற்குத் தீவுத் திடலுக்குப் பதிலாக ஓர் இடத்தை மாநில அரசிடமிருந்து பெறுவது பற்றி விரைவில் அதனுடன் பேச்சு நடைபெறும்.

மக்களவையில், பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் இதனை அறிவித்தார்.

பட்டதாரிகள் சொந்தத் தொழில் நடத்த உதவி

தமிழ்நாட்டில் 300 வேளாண்மைச் சார்புப் பணி நிலையங்கள் ஏற்படும்

தேர்ந்தெடுக்கப்படுவோருக்குப் பயிற்சி -- ரூ. 50,000-லிருந்து ரூ. 2 இலட்சம் வரை கடனுதவி

சென்னை, செப். 4—

வேலை கிடைக்காத தொழில் நுட்பப் பட்டதாரிகள் சொந்தத் தொழில் நடத்த உதவும்பொருட்டுத் தமிழ்நாட்டில் 300 வேளாண்மைச் சார்புப் பணி நிலையங்கள் ஏற்படுத்தப் படும்; தேவையைப் பொறுத்துப் பின்னர் இந்த எண்ணிக்கை 500-ஆகவும் அதிகரிக்கக்கூடும்.

தமிழ்நாடு வேளாண்மைச் சார்புத் தொழில்கள் கார்ப்பரேஷன் இயக்குநர் வி. இராமமூர்த்தி இதனைத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"1972—73-ம் ஆண்டு முடிவுக்குள் 60 நிலையங்கள் செயல்படத் தொடங்கிவிடும்; ஒவ்வொரு நிலையத்திலும் டிராக்டர்கள் -- விசையால் இயக்கப்படும் மருந்துத் தெளிப்பான்கள் -- மற்ற சாகுபடிச் சாதனங்கள் ஆகியவை இருக்கும்; இவை விவசாயிகட்கு வாடகைக்கு விடப்படும்; அன்றியும், சிறிய பழுது பார்க்கும் வேலைகளையும் இவை மேற்கொள்ளும்.

பொறியியல் பட்டதாரிகள் -- டிப்ளமாதாரர்கள் -- வேளாண்மைப் பட்டதாரிகள் -- கால்நடைப் பட்டதாரிகள் ஆகியோர் இவற்றை நடத்தத் தேர்ந்தெடுக்கப்படுவர்; இவர்கட்கு, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பத்னி -- அரியானாவைச் சேர்ந்த ஹிஸ்ஸார் ஆகிய இடங்களிலுள்ள டிராக்டர் நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக் காலம் முழுவதுக்கும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 250 தரப்படும்.

ஏற்கனவே 20 பேர் பத்னியில் பயிற்சி பெற்றுள்ள வருகிறார்கள்; பயிற்சி முடிந்தபின் கடன் உதவி அளிப்பதற்காக இவர்களது பெயர்களைப் பாங்கிகட்கு இந்தக் கார்ப்பரேஷன் பரிந்துரை செய்யும்; ஒவ்வொரு நிலையத்துக்கும் ரூ. 50,000 லிருந்து ரூ 2 இலட்சம் வரை கடனுதவி அளிக்கப்படும்; 5 சதவிகித வட்டியுடன் 7 ஆண்டுக் காலத்தில் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்."

அஞ்சல் -- தந்தி ஊழியருக்குக் குடியிருப்பு வசதி

புதுடில்லி, ஆக. 31—

மத்திய தகவல் -- தொடர்பு அமைச்சர் எச். என். பகுகுணா, தமது அமைச்சகத்துடன் இணைந்த நாடாளுமன்ற ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடம் பேசுகையில், 'கடந்த நாலரை மாத காலத்தில், அஞ்சல் -- தந்தித்துறை ஊழியர்களுக்கு ரூ. 2.38 கோடி செலவில் குடியிருப்புகள் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறினார்.

தொலைபேசிக் கட்டணம் பாக்கி இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி ரூ 6.04 கோடி என்றும், இதைக் குறைப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

நான்கு நகரங்களை இணைக்கும் புதிய இரயில்பாதை

நெல்லை -- நாகர்கோவில் -- கன்னியாகுமரி இணைப்பதற்கு ரூ. 14.53 கோடி செலவு

முதலமைச்சர் கலைஞர் தலைமையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அடிக்கல் நாட்டுகிறார்

சென்னை, செப். 4 -

நெல்லை -- நாகர்கோவில் -- கன்னியாகுமரி ஆகிய நகரங்களை இணைத்துப் புதிய இரயில் பாதை அமைக்கப்படுகிறது; ரூ 14.53 கோடி செலவில் அமைக்கப்படும் இந்தப் புதிய இரயில் பாதையின் நீளம் $102\frac{1}{4}$ மைல்களாகும் -- அகல (பிராட்கேஜ்) இரயில் பாதையாகும்.

தமிழ்நாட்டில் இதுவரையில் இரயில் பாதை இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமாகும்; முதன் முதலாக இப்போது இரயில் பாதை போடப்படுகிறது.

இந்தப் புதிய இரயில் பாதையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில், 'சந்திப்பு' (ஜங்ஷன்) ஆக அமையும்; அங்கிருந்து, திருநெல்வேலி -- திருவனந்தபுரம் -- கன்னியாகுமரி ஆகிய ஊர்களுக்கு இரயில்பாதை போடப்படுவதால், இந்த நான்கு நகரங்களும் இதன் மூலம் இணைக்கப்படுகின்றன.

இந்த இரயில் பாதையில் மொத்தம் 24 இரயில் நிலையங்கள் அமைக்கப்படும்; 16 பெரிய பாலங்களும், 405 சிறிய பாலங்களும் இருக்கும்.

முதல்வர் தலைமையில் தலைமையமைச்சர் அடிக்கல் நாட்டுகிறார்

இந்த இரயில் பாதைக்கான அடிக்கல் நாட்டு விழா, செப் 6-ந் தேதி காலை 9-மணிக்கு கன்னியாகுமரியில் நடைபெறுகிறது.

விழாவுக்கு, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைதாங்குகிறார்; தலைமையமைச்சர் இந்திரா காந்தி அடிக்கல் நாட்டுகிறார்

விழாவில், மத்திய அரசின் இரயில்வே அமைச்சர் டி. ஏ. பாய், கேரள முதல்வர் அச்சுத மேனன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

போர்களில் வீர மரணம்

நிரந்தரமாக நினைவுச் சின்னம்

புதுடில்லி, செப். 2

புதுடில்லியில் நிரந்தரமாகப் போர் நினைவுச் சின்னம் அமைப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இந்தத் தகவலை, நாடாளுமன்றத்தில் இராணுவ அமைச்சர் ஜெகஜீவன்ராம் தெரிவித்தார்.

வெகாரியா என்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியா சுதந்தரமடைந்த பிறகு ஏற்பட்ட போரில் வீர மரணமடைந்த நமது இராணுவ வீரர்களின் நினைவாகம் புதுடில்லியில் நிரந்தரப் போர் நினைவுச் சின்னம் எழுப்பும் திட்டம் ஒன்று இருக்கிறது; இது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது; விரைவில் முடிவு எடுக்கப்படும்,

கடந்த டிசம்பர் மாதம் பாகிஸ்தானுடன் நடந்த போர் உட்பட போரில் மரணமடைந்த அனைவருடைய பெயர்களையும் தனித்தனியாக அந்தப் போர் நினைவுச் சின்னத்தில் பொறிக்க வேண்டுமா – அல்லது மொத்தமாகக் குறிப்பிட்டால் போதுமா என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது."

அதிகாரிகளின் பதவி விலகல்

அமைச்சகத்துக்கு வியப்பு

இரசாயன உரக் கழகம் செயல்படும் நிலை என்ன?

புதுடில்லி, செப். 4—

இந்திய இரசாயன உரக் கார்ப்பரேஷனின் முழு நேர இயக்குநர்களின் பதவிவிலகல், பெட்ரோலியம் -- இரசாயனப் பொருள் அமைச்சகத்துக்கு வியப்பைத் தந்திருக்கிறது.

அவர்களுடைய பதவி விலகுதலைப்பற்றி அமைச்சகத்துக்கு எதுவும் தெரியாது; ஏனெனில் பதவி விலகல் கடிதங்கள் நேரடியாகத் தலைமையமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன; இது வழக்கமில்லாத நடைமுறையாகும்.

பதவி விலகல் தகவல் குறித்து அதிகாரபூர்வமான கருத்து எதுவும் வெளியாகவில்லை.

எனினும், இயக்குநர்கள் தாங்களாகவே இராஜினாமா செய்துவிட்டதால், கார்ப்பரேஷனைத் தக்கவாறு சீரமைக்க அமைச்சகம் முயற்சி எடுக்கவேண்டிய அவசியம் இல்லாது போய்விட்டது; கார்ப்பரேஷன் செயல்பட்டுவந்த விதம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்று தெரிகிறது.

ஆண்களுக்குக் கருத்தடைச் சிகிச்சை

பாதகமான விளைவுகள் ஏதேனும் ஏற்படுகிறதா?

அமைச்சர் க. அன்பழகன் நிலைமை விளக்கம்

சென்னை, செப். 2—

"தமிழ்நாட்டில் இதுவரையில் ஆண்களுக்குச் செய்யப்பட்டுள்ள கருத்தடை அறுவைச் சிகிச்சை, பொதுவில் வெற்றிகரமாகவே இருந்திருக்கிறது; விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படவில்லை"

என்று நல்வாழ்வுத்துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள், நிருபர்களிடம் தெரிவித்தார்.

இத்தகைய அறுவைச் சிகிச்சையால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுபற்றி -- ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக -- உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு முறையீட்டு வழக்கில் வெளியான தகவலை நிருபர்கள் சுட்டிக்காட்டினர்.

"இந்த அறுவைச் சிகிச்சை முறை மிகவும் எளிதானது -- பாதகமான விளைவுகள் ஏற்படுவதில்லை என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர்; ஆனால் இங்கும் அங்குமாக சில தனிப்பட்டவர்கள் பிரச்சினையில் பாதகமான மனோபாவ விளைவுகள் ஏதாவது ஏற்படுவதாக இருக்கலாம்" என்றார் அமைச்சர்.

"தமிழ்நாட்டில் இரண்டரை இலட்சம் ஆண்களுக்குமேல் இந்த அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள்; அதில் ஒன்றிரண்டு பேர் பிரச்சினையில்தான் அறுவைச் சிகிச்சையுடன் தொடர்பில்லாத வெளிக் காரணங்களால் விளைவுகள் ஏற்பட்டுள்ளன; இதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை; அறுவைச் சிகிச்சையில் டாக்டர்கள் எப்போதும் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகின்றனர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தளபதி நியாஜி

கோரிக்கை ஏதேனும் வங்காள தேசம் எழுப்பியதா?

புதுடில்லி, செப். 2—

"பாகிஸ்தான் தளபதி நியாஜியை ஒப்படைக்கும்படி வங்காள தேசம் கோரிக்கை ஏதும் அனுப்பவில்லை"

என்று நாடாளுமன்ற மேலவையில், வெளிநாட்டுத் துறைத் துணை அமைச்சர் சுரேந்திரபால் சிங் கூறினார்.

கடந்த டிசம்பரில் பாகிஸ்தானுடன் நடந்த போரின்போது, இந்தியப் படையிடம் சரணடைந்தவராவார் -- பாகிஸ்தான் தளபதி நியாஜி.

அவரும் -- பாகிஸ்தான் போர் வீரர்களும் (ஏறத்தாழ 63,000 பேர்) தற்போது இந்தியாவில் போர்க் கைதிகளாக இருக்கிறார்கள்.

"நீதி விசாரணை நடத்துவதற்காக நியாஜியை எங்களிடம் ஒப்படையுங்கள் என்று இந்தியாவிடம் வங்காள தேசம் கேட்டதா?"

என்று சீதா தேவி, லட்சுமி குமாரி ஆகிய உறுப்பினர்கள் கேட்டனர்.

அமைச்சர் சுரேந்திர பால் சிங் பதிலளிக்கையில், 'வங்காள தேச அரசிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் வரவில்லை' என்று கூறினார்.

"போர் தோல்வி பற்றி விசாரிக்கப் பாகிஸ்தான் ஒரு குழு அமைத்திருக்கிறது; அந்தக் குழுவுக்கு நியாஜி அறிக்கை ஏதும் அனுப்பினாரா?"

என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியதாவது:—

'நியாஜியோ அல்லது நம் வசமுள்ள பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளோ அப்படிப்பட்ட அறிக்கை ஏதும் அனுப்பவில்லை.''

வறட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதி

ரூ.25 இலட்சம் செலவிட அரசு முடிவு

செய்தியாளரிடம் முதல்வர் கலைஞர் விளக்கம்

சென்னை, செப். 4—

"மாநிலத்தின் வறட்சிப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து வந்த வருவாய் வாரிய உறுப்பினர்கள் அரசுக்கு அறிக்கை கொடுத்துள்ளனர்; இது அரசின் ஆய்வில் உள்ளது.

'இதற்கிடையில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதித் திட்டத்திற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது; மாவட்டக் கலெக்டர்கள் மூலம் இது செலவிடப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விவரம் தெரிந்தவர்களே விவசாயிகளைத் திசைதிருப்ப முயற்சிக்கின்றனர்

விவசாய வருமான வரி விதிப்பு சிறு விவசாயிகளைப் பாதிக்கும் என்று காமராசர் அண்மையில் பேசியதைப் பற்றி முதலமைச்சர் குறிப்பிட்டு நிருபர்களிடம் பின்வருமாறு கூறினார்: –

"விவசாய வருமான வரி மசோதாவுக்கு ஏற்கனவே விளக்கம் தரப்பட்டுள்ளது; 'பயிர்வாரி அடிப்படையில் கணக்கிடப்படும் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் விவசாய வருமான வரி இல்லை' என்று அந்த மசோதாவில் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது; நான் இன்னும் ஒருபடி கூடுதலாகவே சென்று சட்டமன்றத்தில் ஐந்து சாதாரண ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயி எந்தப் பயிரிட்டாலும் விவசாய வருமான வரி கிடையாது' என்று அறிவித்திருக்கிறேன்.

அந்தச் சலுகை, உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற வகையில் கூட்டு ஆய்வுக் குழு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

அதனால் 'ஒரு விவசாயி ஓர் ஏக்கர் கரும்பு சாகுபடி செய்தால் இரண்டு ஏக்கராகக் கணக்கிடப்படும்' என்று சொல்வது விவசாயிகளைத் திசைதிருப்பும் பேச்சாகும்.

இதனை, பொருள் தெரியாதவர்கள் பேசினால் பரவாயில்லை; அரசியல் காரணத்திற்காக விவரம் தெரிந்தவர்கள்கூட இப்படிப் பேசுவது நல்லதல்ல!

ஐந்து சாதாரண ஏக்கர் வரையில் வரியில்லை

"ஐந்து சாதாரண ஏக்கர் வரையில் வருவான வரி இல்லை" என்று நான் சொல்லியிருக்கிறேன்......

இவ்வாறு முதலமைச்சர் கூறும்போது அமைச்சர் மாதவன் குறுக்கிட்டு, 'ஒருவர் ஐந்து சாதாரண ஏக்கர் வைத்திருந்தால், அவர் அதில் எந்தப் பயிரை மாறி மாறிப் பயிரிட்டாலும் வரி இல்லை; இதற்காக அவர் கணக்குப் பிள்ளைகளைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை' என்று சுட்டிக்காட்டி என்று சுட்டிக்காட்டினர்.

உடனிருந்த வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் மேலும் விளக்கம் அளிக்கையில், 'இந்தச் சலுகையால் சிறு விவசாயிகளுக்குத்தான் நன்மை கிடைக்கும்; அவர்கள் கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது' என்றார்.

முதலமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:—

'பெரிய பணக்காரர்கள் பயிரிடும் ரப்பர்--பாக்கு--திராட்சை போன்றவைகளுக்கு இந்தச் சலுகையை நீக்கி மற்றவைகளுக்கு இந்தச் சலுகை பொருந்தும்படி கூட்டு ஆய்வுக் குழு வேண்டுமானால் முடிவு எடுக்கலாம்."

துணிவு -- சக்தி காமராசருக்கு இருக்குமானால்....

"மாநில சுயாட்சியைப் பெறப் போராட்டம் நடத்துவதற்குத் தி.மு.க.-வினருக்கு சக்தியும் இல்லை--தைரியமுமில்லை என்று காமராசர் பேசியிருக்கிறார்; தனியே என்னுடன் காமராசர் பேசியபோது, 'எனக்கு அந்தச் சக்தியும்- துணிவும் இருக்கிறது' என்று சொன்னார்; 'நானே செய்கிறேன்' என்றும் சொன்னார்; எனக்கு, சக்தி--துணிவு இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; அவருக்கு அந்தச் சக்தி தொடர்ந்து இருக்குமானால் அவரே அந்தக் காரியத்தைச் செய்தால் வரவேற்பேன்.''

விலைவாசியைக் கட்டுப்படுத்த...

கேள்வி:—"விலைவாசியைக் கட்டுப்படுத்த மாநில அளவில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?"

பதில்:—''இதுபற்றி மத்திய அரசைக் கேட்பதே மாநில அரசு அளவில் எடுக்கக்கூடிய நடவடிக்கையாகும்; இன்றியமையாப் பண்டங்களை வாங்கி விநியோகம் செய்வது பற்றியும் யோசித்து வருகிறோம்."

கேள்வி:—"உணவுப் பண்டங்கள் பதுக்கலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

பதில்:—''விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில், பதுக்கலைக் கைப்பற்றுவதும் ஒரு நடவடிக்கைதான்."

பரிசுச் சீட்டுகள்-- மாற்றங்கள் பற்றி அரசு யோசனை

கேள்வி:—"தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பல புதுமைகள் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்களே --அது எந்த வகையில் இருக்கும்?"

பதில்:—''வேறு மாநிலங்களில் பரிசுத் தொகை அதிகமாக இருப்பதால், அந்த மாநிலப் பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்கின்றன; இங்கும் அதுபோல் பரிசுத் தொகையை உயர்த்துவது பற்றி யோசித்துவருகிறோம்; அதே நேரத்தில், பரிசு பெறுவோரின் எண்ணிக்கை குறையாமலும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்; வேறு மாற்றங்கள் பற்றியும் யோசித்துவருகிறோம்; பிச்சைக்காரர்கள் நிவாரண நிதிக்காக வெளியிட்ட சிறப்புப் பரிசுச் சீட்டுப்போல், கண்ணொளித்திட்டத்திற்குச் சிறப்புப் பரிசுச் சீட்டு வெளியிடுவது பற்றியும் யோசித்து வருகிறோம்.''

விரைவில் செயல்படச் சிந்தித்து வருகிறோம்

கேள்வி:—"ஐந்தாண்டுக் காலத்தில் பஸ் போக்குவரத்து முழுவதும் அரசுடைமையாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்களே --அது எந்தவடிவில் இருக்கும்?"

பதில்:—'இதனை விரைவில் செயல்படுத்துவதற்கான காரியங்களைப் பற்றிச் சிந்தித்துவருகிறோம்; 1977-ல் தமிழகத்திலுள்ள எல்லாப் பஸ்களிலும், 'தமிழ்நாடு அரசு' என்று எழுதியிருக்கும்.''

1,640 பேர்களிடம் ரூ. 331.89 கோடி

புதுடில்லி, செப். 2—

இந்தியாவில் ரூ. 10 இலட்சத்துக்கு மேல் சொத்து உள்ளவர்களின் எண்ணிக்கை 1,640 ஆகும்.

அவர்களுடைய மொத்தச் சொத்து மதிப்பு ரூ. 13189 கோடியாகும்.

இந்தத் தகவலை, நாடாளுமன்ற மேலவையில், நிதித் துறை இணை அமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்.

பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கு மின்சார வசதி

புதுடில்லி, ஆக. 31—

கிராம மின்வசதிக் கார்ப்பரேஷன், மொத்த 16 கிராம மின் வசதித் திட்டங்களுக்கு ரூ. 7.54 கோடி கடனுதவி அளிக்க முன் வந்துள்ளது; இவற்றில் 8 திட்டங்கள் பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கென வகுக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டங்களினால், மொத்தம் 14 மாநிலங்களைச் சேர்ந்த 1,552 கிராமங்கள் மின்வசதி பெறும்; 14,200-க்கும் மேற்பட்ட விவசாயப் பம்பு செட்டுகள் இயங்கத் துவங்கும்; சுமார் 850 சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் இத்திட்டங்களினால் பயனடையும்.

கிராம மின்வசதிக் கார்ப்பரேஷன் இதுவரையில் 290 திட்டங்களுக்கு கடனுதவி அளித்துள்ளன.

நாட்டின் வருங்காலம்

நிலவளர்ச்சிகாலனிகள் அமைவதைப் பொறுத்திருக்கிறது

கிராம மக்களின் தன்னிறைவுக்கு வழிகோலும் -- குடிசைத்தொழில்களை நிறுவி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த இயலும்

சென்னை, செப். 4—

"நம் நாட்டின் வருங்கால முன்னேற்றம், நாடு முழுவதிலும் நில வளர்ச்சிக் காலனிகள் அமைப்பதைப் பொறுத்தே இருக்கிறது.

நில வளர்ச்சிக் காலனிகள் அமைப்பதன்மூலம் கிராமப்புறப் பொருளாதாரத்தையும் -- அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும்.

கிராம மக்கள் தன்னிறைவு பெற்று மேற்கொண்டு தங்களுக்குத் தேவையான உதவிகளை பிறர் உதவியின்றித் தங்களுக்குத் தாங்களே நிறைவு செய்துகொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டில் பல ஆயிரக்கணக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன; இவைகளில் பெரும் பகுதியை மாநில அரசின் உதவியால் சாகுபடி நிலங்களாக மாற்ற முடியும்; இந்த நிலங்களை 200 குடும்பங்களுக்கு 1,200 ஏக்கர் என்ற விகிதத்தில் பிரிக்கலாம்; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஓரளவு நிலத்தைச் சொந்தமாக்கலாம்; அந்த நிலம் பரம்பரைச் சொத்தாகப் பாவிக்கப்படலாம்; ஆனால், அந்த நிலத்தை விற்கவோ -- மாற்றவோ கூடாது.

தொடக்கத்தில் நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்வதற்கு ஏற்ற தாக்குதல் -- விவசாயச் சாதனங்கள் தருவது -- நீர்ப்பாசனம், சாலை, வீட்டுவசதி போன்றவற்றைக் குடியேறுபவர்களுக்கு அரசு செய்து கொடுக்கவேண்டும்; இப்பணிகளுக்கான வேலை முழுவதையும் குடியேறுபவர்களே செய்யவேண்டும்.

நிலத்திலிருந்து வருவாய் கிடைக்கும் வரையில் அவர்களின் பணிகளுக்கு அரசு கூலி தரவேண்டும், இந்தக் கட்டம் முடிவுற்றதும் குடியேறுவோர்களிடமிருந்தே சிலரைத் தேர்ந்தெடுத்து காலனி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்கவேண்டும்; அதன் பிறகு அரசு அதற்கு ஒரு மேற்பார்வையாளராக இருக்கவேண்டும்.

தேவையான கடன் வசதிகளையும், இரசாயன உரம் -- விவசாயக் கருவிகள் -- நவீன முறைகள் பற்றிய தகவல்கள் ஆகியவற்றைப் பெறுவதில் அவர்களுக்கு உதவியளித்தும் வரலாம்.

இப்படிப்பட்ட காலனிகள் உருவான பின்னர், அந்தப் பகுதியில் குடிசைத்தொழில்களை நிறுவி அதிக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

சமுதாயக் கூட்டுறவில் அமையும் முயற்சியே இத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

நாடு முழுவதிலும் இப்படிப்பட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டால், கிராம மக்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைப்பதுடன், வேலையில்லாமல் உணவுக்குத் திண்டாடும் ஏராளமான மக்களுக்கு நல்வாழ்வு ஏற்படவும் வழிகோலும்; அரசும் தொடக்கத்தில் இத்திட்டத்துக்கு செலவிட்ட முதலீட்டுக்கு ஏற்ற இலாபத்தையும் அடைந்துவிட முடியும்.

-- குடியரசுத் தலைவர் வி. வி. கிரி

கறுப்புப்பண முதலாளிகளின் காவலர்

‘ஏழை உழவர்களை நசுக்கும் கொடியவர்’

ஆந்திர முதலமைச்சருக்கு எதிர்க் கட்சி உறுப்பினர் சூட்டும் பட்டம்

ஐதராபாத், செப். 3—

"முதலமைச்சர் பி. வி. நரசிம்ம ராவ், நரசிம்ம அவதாரம் எடுத்த கடவுளுக்கு நேர்மாறானவராக இருக்கிறார்; அவர் தமது நிலச் சீர்திருத்தக் கொள்கையின் மூலம், இரண்ய கசிபுவைக் கொல்வதற்குப் பதிலாகப் பிரகலாதனையே கொன்றிருக்கிறார்"

என்று ஆந்திரச் சட்டமன்றத்தில், எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

திரு. என். சீனிவாசலு ரெட்டி என்ற அந்த உறுப்பினர் (எஸ். டி. எஃ.) மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"நகரங்களில் உள்ள கறுப்புப் பண முதலாளிகளையெல்லாம் விட்டுவிட்டுக் கிராமங்களில் உள்ள உழவர்கள்மீது முதலமைச்சர் கைவைத்துள்ளார்.

"நமது முதலமைச்சருக்கு, ‘தர்ம ரக்சகா’ (அறங்காவலர்) என்ற பட்டம் கொடுக்கப்பட்டதாக அண்மையில் பத்திரிகைகளில் செய்தி வந்தது; அந்தப் பட்டத்துக்குப் பதில் ‘ரிது கண்டகா’ (உழவர்களை நசுக்குபவர்) என்ற பட்டம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

"காங்கிரசுக் கட்சி, உபரி நிலங்கள் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தது; ஆனால் இப்போது ஏழைகட்கு நிலம் விலைக்கு விற்கப்படுகிறது.

"வேண்டுமானால், முதலமைச்சரும் அவரது அமைச்சரவையினரும் ஒரு மூன்று மாத காலத்துக்கு எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்து 13 பேர்களைக் கொண்ட எனது கட்சியிடம் நிர்வாகத்தை விட்டுப் பார்க்கட்டும்; உபரி நிலத்தை எப்படி உபயோகிப்பது என்பதை நான் செய்து காட்டுகிறேன்."

போக்குவரத்துப் போலீசாருக்குப் பிளாஸ்டிக் ‘பெல்ட்’

மின்சாரப் பல்புகள் பொருத்தப்பட்டிருக்கும்

சென்னை, செப். 4—

சென்னையில் போக்குவரத்துப் போலீசார் பயன்படுத்தப் புதிய ரக ‘பிளாஸ்டிக் பெல்டு’ ஒன்று வந்திருக்கிறது.

இரவு நேரங்களில் முக்கிய சாலை சந்திப்புக்களில் நிற்கும் போக்குவரத்துப் போலீசார் இதை அணிந்துகொள்வார்கள்; இந்த ‘பெல்ட்’டில் மின்சாரப் பல்புகள் பொருத்தப்பட்டுள்ளன; பாட்டரி செல்களின் மூலம் அதில் உள்ள பல்புகள் ஒளியுடன் எரிந்துகொண்டே இருக்கும்; இதனால் இருட்டில் போலீசார் நிற்பதை மற்றவர்கள் நன்கு பார்க்க முடியும்.

கிழக்கு ஜெர்மனியிலிருந்து இந்த நவீன ‘பெல்ட்’ சோதனைக்காக வரவழைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற ‘பெல்ட்’ இப்போது முதன் முதலாகச் சென்னைக்கு வந்துள்ளது.

தொழில் தகராறுகளில் மூன்றுவது நபர் தலையீடு கூடாது

பிரச்சினைகளை இருதரப்பினரும் விட்டுக் கொடுத்துப் பேசித் தீர்த்துகொள்ளவேண்டும்

சென்னை, செப். 4—

"அரசுத்துறை தொழில் நிறுவனங்களிலும் — தனியார் நிறுவனங்களிலும், நிர்வாகிகளுக்கும் — தொழிலாளர்களுக்கும் நல்ல உறவு இருக்கவேண்டும்; தொழிலாளர்களும் — தொழில் அதிபர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

"சனநாயக சமுதாயத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதும் — அவை சில சமயங்களில் முற்றித் தகராறுகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததவையாகும்; இத்தகைய கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் பிரச்சினைகளை நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

"தொழில் தகராறுகளை நடுவர் தீர்ப்புக்குவிட அனுமதிக்கக் கூடாது; மூன்றுவது நபர் தலையீடு, தொழில் தகராறுகளில் ஏற்படுவது விரும்பத்தக்கது அல்ல!

தொழில் அதிபர்கள், தங்கள் இலாபத்தைத் தொழிலாளர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்; தொழிலாளர்களும் உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறை காட்டவேண்டும்."

என்று, குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் இங்கு நடைபெற்ற விழா ஒன்றில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வற்புறுத்தினார்.

கிண்டி பொறியியல் கல்லூரி விபத்து

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 நிதியுதவி

முதலமைச்சர் கலைஞர் உத்தரவு

சென்னை, செப். 4—

கிண்டி பொறியியல் கல்லூரியில் நவீன முறையில் கட்டப்பட்டுவந்த கலை அரங்கம் இடிந்து விழுந்ததன் காரணமாக உயிரிழந்த 7 பேர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் உதவி நிதி’யிலிருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ 1000 உதவி நிதியாக அளிக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

கல்வியமைச்சர் நாவலர் இரங்கல்

கிண்டி பொறியியல் கல்லூரியின் கலை அரங்கு விபத்துக்குறித்துக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில கூறியிருப்பதாவது:—

‘கிண்டி பொறியியல் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த கலை அரங்கம் 1-9-72 ல் இடிந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர்கள் சிலர் உயிரிழந்தது குறித்து மிகுந்த அதிர்ச்சியும் — வேதனையும் அடைந்திருக்கிறேன்; அந்தத் தொழிலாளர் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இவ்விபத்தில் காயமடைந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்கள் விரைவில் முழு நலம் பெறுவர் என நம்புகிறேன்.

"விபத்துக்கான காரணங்களை உடனடியாக ஆராயுமாறு தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்."

பொன் விழா நினைவு மண்டபத்துக்கு அண்ணா பெயர்

விழுப்புரம் நகராட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

விழுப்புரம், செப். 4—

விழுப்புரம் நகராட்சிப் பொன் விழா மண்டபத்துக்கு அண்ணா அவர்களின் பெயர் சூட்டப்படுகிறது.

விழுப்புரம் நகராட்சிக் கூட்டம், தலைவர் எம். சண்முகம் எம்.ஏ. தலைமையில் நடந்தது.

நகராட்சியின் பொன் விழாவை யொட்டி, ‘பொன் விழா நினைவுக் கட்டடம்’ கட்டப்பட்டு வருகிறது; அந்தக் கட்டடத்துக்கு அண்ணா அவர்களின் பெயரை வைக்க வேண்டும என்றும், முதலமைச்சர் கலைஞர் அவர்களைத் திறப்பு விழாவுக்கு அழைக்க வேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொன் விழா பற்றி நகராட்சித் தலைவர் எம். சண்முகம் நிருபர்களிடம் பேசுகையில், ‘இத்திங்கள் இறுதியில் விழா நடைபெறும்; விழாவில் முதலமைச்சர் மற்றும் மூன்று அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்’ என்று கூறினார்.

இளந்தலைமுறையினரின் ஆக்கப் பணிகள்

நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படாவிடில் முன்னேற்றம் காண முடியாது

இந்தியக் குடியரசுத் தலைவர் கருத்து விளக்கம்

சென்னை, செப். 4—

"பண்டையப் பெருமைமிக்க நமது நாட்டில் புதிய சமூக முறை ஒன்றை உருவாக்குவதில் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். தனி மனிதனின் கௌரவம் — சுதந்தரம் — சமத்துவம் — நீதி ஆகியவற்றின் அடிப்படையில் இப்புதிய சமூக முறையை நாம் நிர்மாணித்து வருகிறோம்.

மரபு வழிவந்த முறைகளில் ஊறி — நிலைத்துவிட்ட ஒரு சமூகத்தைச் சலனங்கள் நிறைந்ததாக மாற்றி முன்னேற்றுவது மாபெரும் பணியாகும்; மக்கள் விருப்புடன் ஒத்துழைத்தாலன்றி, அரசு தனியாக நின்று இப்பணியை நிறைவு செய்துவிட முடியாது.

நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் இளைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டு, அப்பணிகளில் அவர்கள் ஈடுபட வழிகாட்டுவது சமூகநல நிறுவனங்களின் முதல் கடமையாகும். இளம் தலைமுறையினரின் திறனை ஆக்கப் பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ளாமற் போனால் நாம் நல்ல முன்னேற்றம் காண முடியாது.

நமது நாட்டு வளங்களின் நிலை அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை; இந்தப் பற்றாக்குறைகளை ஈடு செய்வதற்குக் கடுமையான உழைப்பையும, நமது விஞ்ஞானிகள் — தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோரின் திறமையையுமே நாம் அதிகம் சார்ந்திருக்க வேண்டியவர்களாகிறோம்.

இன்று உலகம் முழுவதும் இளைஞர்கள் அமைதி இழந்து இருக்கின்றனர்; இது எந்த ஒரு வட்டாரத்தையோ அல்லது எந்த ஒரு நாட்டையுமோ மட்டும் பாதித்துவரும் பிரச்சினையல்ல; உலகம் முழுவதும் இப்பிரச்சினை பரந்து காணப்படுகிறது. ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு நாம் அஞ்சவேண்டிய அவசியமில்லை; ஏனெனில் இவை அனைத்தும் நிகழவிருக்கும் ஒரு பெரிய மாற்றத்தின் ஒரு பகுதியே!

இளைஞர்களுக்கும் — பழைய தலைமுறையினருக்கும் நடுவிலுள்ள — என்றும் விரிவடைந்துவரும் இடைவெளியை இயன்ற வரையில் குறைப்பதற்கான வழிகளை நாம் ஆராயவேண்டும்; இரு தலைமுறையினரும் மற்றவரின் கருத்துக்களை உணர்ந்து மதிக்க முன்வந்தால்தான் இது இயலும்.

இளைஞர்களின் நடவடிக்கைகளுக்குக் காரணமான அவர்களின் உள் உணர்ச்சிகளையும் — மனோபாவங்களையும் உணர்ந்து செயல்பட வேண்டும். அதே சமயத்தில் இளைஞர்களும், நமது சமூகத்திலுள்ள கொள்கை — கோட்பாடுகளை ஒரேயடியாகத் தூக்கியெறியும் செயல்களில் ஈடுபடக்கூடாது; வெறுப்புட்ட எண்ணத்தையும் ஈர்ப்பு இன்மையையும் தெரிவித்துக் கொள்வதிலேயே இளைஞர்கள் திருப்தியடைந்துவிடக் கூடாது; ஆனால், பழமைக்கும் — இன்றைய ஒதுக்கவியலாத் தேவைகளுக்கும், வேட்கைகளுக்கும் சவால்விடும் வருங்காலத் தேவைகளுக்கும் இடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உண்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களின் பெரும் அழிவுக்கு வழிகோலும் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு இன்று விஞ்ஞானம் தவறான வழிகளில் பயன்படுத்தப்படுகிறது; ஆனால் ஏழ்மையை ஒழிப்பதற்கும் — உலக மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கையை அளிப்பதற்கும் மட்டுமே அணுசக்தி பயன்படுத்தப்பட வேண்டும்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'வேலையில்லாத மருத்துவப் பட்டதாரிகட்கு வேலை வேண்டும்' என்றும், 'பட்டப் பிற்காலப் படிப்புப் படிப்பவர்கட்கு உதவித் தொகையை மாற்றியமைக்க வேண்டும்' என்றும், 'அரசு மருத்துவர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதைத் தடை செய்யவேண்டும்' என்றும் கோரி இவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

வேளாண்மை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

சென்னை, செப். 2—

வேளாண்மைத் துறை அமைச்சராக 2—9—72 அன்று பதவியேற்ற திரு அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்குத் தலைமைச் செயலகத்தில், அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்களது அறைக்குப் பக்கத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விற்பனையாளர் தேவை

இதயத் தெய்வம் — பேரறிஞர் அண்ணாவின் கருத்துக் கருவூலமாம ‘காஞ்சி’ வார இதழ், கவிஞர் புலமைப்பித்தன் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு மீண்டும் புதிய பொலிவோடு வெளிவருகிறது.

கழக மறவர்க்குக் கைவாளாக — கவித் தமிழ் மொழிக்கோர் அணிகலனாக — இலட்சியப் போர்ப்பரணி பாடும்! இலக்கியத் தேனருவி ஓடும்!

மலர் உட்பட ஆண்டுசந்தா ரூ 16

அரை ஆண்டு சந்தா ரூ. 8

குறிப்பு:— அண்ணாவின் அரிய காவியமான எழுத்தோவியங்கள் தொடர்ந்து இடம்பெறும்.

விவரங்களுக்கு!—

ஆசிரியர், ‘காஞ்சி’,
86, திருக்கச்சி நம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]